தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் - 04.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.CP 5068/F/2024

திரு.க.செல்வராஜி .. புகார்தாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி-606213. .. பொது அதிகார அமைப்பு

ஆணை-II

இவ்வாணையம் 23.09.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக அப்போதைய பொதுத்தகவல் அலுவலர், திரு.எஸ்.அண்ணாமலை, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.அ.பாஸ்கர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், கள்ளக்குறிச்சி ஆகியோர் 04.11.2026 இன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அப்போதைய பொதுத்தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தினை சமர்ப்பித்தார். மேலும் திரு.வே.ரமேஷ், அப்போதைய மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) (ஓய்வு), கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினை சமர்ப்பித்தார். தற்போதைய பொதுத்கதவல் அலுவலர் த.அ.உ.ச.சி.ப.எண்.192/2026, நாள் 02.11.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தற்போது தகவல் வழங்கியிருப்பதாகவும் அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் ஏற்கிறது. மேலும், அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.வே.ரமேஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை இவ்வாணையம்

ஏற்கிறது. மேலும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.எஸ்.அண்ணாமலை, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி அவர்களால் அளிக்கப்பட்ட விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கவில்லை என்பதை பதிவு செய்து உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

"மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மனுதாரர் கோரியுள்ள தகவலை உரிய காலத்தில் வழங்காத திரு.எஸ்.அண்ணாமலை, அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005, சட்டப்பிரிவு 20(1)- கீழ் அபராதம் ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை அப்போதைய பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் 02.12.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது".

ஓம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். CP 5068/F/2024</u>

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு:-</u>

பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி-606213.

<u>அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்</u>

தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி-606213.
<u>(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)</u>

<u>அப்போதைய பொதுத்தகவல் அலுலர் /</u>

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி-606202.
<u>(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)</u>

புகார்தாரர்:-

திரு.க.செல்வராஜி,
வினைத்தீர்த்தாபுரம் கிராமம்,
மேலூர் அஞ்சல்,
கள்ளக்குறிச்சி வட்டம்,
கள்ளக்குறிச்சி - 606201.

Copy to file: KR/PA